**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 61 of 2017

Depositions of PW - 2 witness for ________ Prosecution / Defence / Court

Name : சக்திவேல்

Father's Name : ஆறுமுகம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of October** 2025.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது சூலூரில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்துபோன கதிர்வேல் என்னுடைய சித்தப்பா மகன் ஆவார். கடந்த 19.04.2015 ஆம் தேதி மாலை நான் எனது வீட்டில் இருந்த பொழுது ஆம்புலன்ஸ் ஓட்டுநர் எனக்கு போன் மூலம் தகவல் சொல்லி நீலாம்பூர் ஸ்ரீ அன்னை டவர்ஸ் அருகே கதிர்வேல் என்பவருக்கு விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் சிகிச்சை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாகவும் கூறினார். நான் உடனே புறப்பட்டு கே எம் சி மருத்துவமனைக்கு சென்று எனது தம்பி கதிர்வேல் அவர்களை பார்த்தபொழுது அவரது தலையில் பலதரப்பட்டக்காயம் ஏற்பட்டு மயக்க நிலையில் இருந்தார். விபத்து குறித்து நான் உறவினர்களுக்கு தகவல் சொன்னேன். எனது தம்பி கதிர்வேல் ஒரு நாள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றார்.

2. அப்பொழுது நானும் அவரிடம் இருந்தேன். பின்னர் விபத்து குறித்து நடவடிக்கை எடுக்க

கோரி எழுத்து மூலமாக புகார் சூலூர் காவல் நிலையத்தில் கொடுத்தேன். இரண்டு நாட்கள் சிகிச்சையிலிருந்து எனது சகோதரர் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டதுதான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது சகோதரரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. விபத்து ஏற்பட்டவுடன் எனக்கு தகவல் சொன்னார்கள் என்றால் சரிதான். எனது சகோதரர் கதிர்வேல் அவர்களுக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். மேலும் ஓட்டுநர் உரிமத்தை போலீசார் கேட்ட பொழுது கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் இருசக்கர வாகனத்தின் பெயர் அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து நடந்த அன்று நான் மருத்துவமனையில் இருந்த பொழுது மருத்துவமனைக்கு வந்த போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவ விபத்தானது கதிர்வேல் அவர்களின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றும் எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.10.08 17:03:45 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**